*3*

# தேவனுடைய கட்டளை அதே வகையில் உள்ள பிற மார்க்க நடைமுறைகளை விலக்குகிறதா?

*தொடங்குவதற்கு: தேவனுடைய நேர்மறையான கட்டளை ஒன்று, “கேட்டுக்கொள்கிறது,” “தவிர்க்கிறது,” “விலக்குகிறது” மற்றும் “அனுமதிக்கிறது” என்பதால், “இது கேட்டுக்கொள்வது என்ன?” என்று நாம் கேட்கலாம். நாம் எழுப்பக்கூடிய இன்னொரு கேள்வி பின்வருமாறு இருக்கலாம்: “ஒரு கட்டளை விலக்குவது என்ன என்பதை நாம் எவ்வாறு அறிய முடியும்?”*

வேதவசனங்களுக்கான நமது விளக்கம் அளித்தலில் நாம், புதிய ஏற்பாட்டினால் ஒரு குறிப்பிட்ட நடைமுறை கேட்டுக்கொள்ளப்படுவதை நாம் நிலைநாட்டியிருக்கும்போது, இரு கேள்விகள் இன்னும் எஞ்சியுள்ளன: (1) தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் உள்ளடங்கியிருக்கும் விபரங்களில் அத்தியாவசியமானவையாக இருப்பவை எத்தனை? (2) தேவனுடைய கட்டளையின் அத்தியாவசியமான அம்சங்கள், அதைப் போன்ற மற்ற நடைமுறைகளை புறம்பே வைக்கின்றனவா அல்லது தவிர்க்கின்றனவா?

எடுத்துக்காட்டாக, ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்குத் தேவையான ஒன்றாக உள்ளது, ஞானஸ்நானம் என்பது மனந்திரும்பிய விசுவாசிகளுக்கானதாக உள்ளது மற்றும் ஞானஸ்நானம் என்பது முழுக்காட்டுதலாக உள்ளது என்று புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. இந்த சத்தியங்களை நாம் புரிந்துகொண்டாலும், இன்னமும் கேள்விகள் எழுப்பப்படலாம். ஞானஸ்நானம் செய்விக்கக் கூடியவர் யார்? (ஞானஸ்நானம் ஒரு கிறிஸ்தவரால் மாத்திரமே செய்விக்கப்பட வேண்டுமா? அது ஒரு மனிதரால் மாத்திரம் அல்லது ஒரு பிரசங்கியாரால் மாத்திரம் செய்விக்கப்பட வேண்டுமா?) எந்த வகையான தண்ணீரில் ஞானஸ்நானம் நடைபெற வேண்டும்? (அது ஒரு இயற்கையான தண்ணீர்க்குட்டையாக இருக்க வேண்டுமா? அது ஓடும் தண்ணீராக இருக்க வேண்டுமா? அது ஒரு ஞானஸ்நானத் தொட்டியில் செய்விக்கப்பட வேண்டுமா?) எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவரல்லாத ஒருவரால் நிகழ்த்தப்பட்ட ஞானஸ்நானம் செல்லுபடியாகுமா ஆகாதா என்று நாம் கேட்கலாம். ஓடும்தண்ணீரில் தரப்படவில்லை என்றால் அந்த ஞானஸ்நானம் வசனத்தின்படியானதாக

இருக்குமா என்று நாம் கேட்கலாம்.

## தேவனுடைய கட்டளைகள் விலக்குகின்றவையாக உள்ளனவா?

தேவனுடைய கட்டளைகளை முறைப்படுத்தும் செயல்முறைகள் எப்போதாவது மற்ற செயல்முறைகளை புறம்பே தள்ளிவைத்து அல்லது தவிர்த்து, விலக்கிவைக்கப்பட்ட அந்தச் செய்முறைகளில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனையை விளைவித்து உள்ளனவா?

யாரேனும் ஒருவர், "ஆராதனையில் இசைக்கருவிகள் இன்றி பாடுதல் சரியானதாக உள்ளதென்று நான் நம்புகிறேன், ஏனெனில் முதல் நூற்றாண்டு சபையில் மக்கள் இவ்வாறே செய்தனர்; ஆனால் மற்றவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினால் அவர்கள் தவறு செய்கின்றனர் என்று கூறுவதற்கு நாம் எந்த அதிகாரத்தையும் கொண்டிருப்பதாக நான் நினைக்கவில்லை" என்று கூறலாம். இன்னொருவர், "கர்த்தருடைய நாளில்தான் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது என்பது உண்மையே, ஆனால் அது - சனிக்கிழமை இரவு போன்ற - மற்ற சில வேளையில் எடுத்துக்கொள்வதை விலக்கி வைப்பதில்லை" என்று உரிமைகோரலாம்.

இதற்கு நேர்மாறாக, தேவனுடைய கட்டளைகள் விலக்கி வைப்பவைகளாக உள்ளன என்பதற்கு வேதாகமம் சாட்சியங்களை முன்வைக்கிறது. இந்த சாட்சியம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### மனிதரின் சட்டங்கள் விலக்கி வைப்பவையாக உள்ளன

கட்டளைகள் தங்கள் இயல்பிலேயே (அது சட்டங்களாக, விதிகளாக அல்லது மற்ற கேட்டுக் கொள்ளுதல்களாக இருக்கலாம்) விலக்கி வைப்பவையாக உள்ளன. அமெரிக்க நாட்டுச் சட்டமானது, ஏப்ரல் 15ம் தேதிக்குள் குடிமகன்கள் தங்கள் குடிமை வருமான வரித் தகவல் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறுவதால் அது, வரித்தகவல் அறிக்கையை சமர்ப்பிக்காது இருத்தல் அல்லது ஏப்ரல் 15க்குப் பின்பு ஒரு தேதியில் வரித்தகவல் அறிக்கையைச் சமர்ப்பித்தல் போன்ற மற்ற செய்முறைகளை விலக்கி வைக்கிறது.[1] ஒரு குடிமகன் இந்தச் சட்டத்தைக் குறைந்த பட்சமாகக் கோட்பாட்டளவில் மதியாது இருந்தால், செலுத்த வேண்டிய தொகை ஒன்றுள்ளது, அவர் மீது தண்டனை விதிக்கப்படும். ஒரு ஆசிரியர் தமது மாணவரிடத்தில் ஒரு அறிக்கையைச் சரியாகத் தயார் செய்து வரும்படி, அதாவது அந்த அறிக்கை குறைந்த பட்சம் பத்துப் பக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும், அது மாதக்கடைசியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டால், அந்த வேலைபற்றிய குறிப்பானது, அறிக்கையைத் தயாரிக்காது இருத்தல், ஆசிரியர் அனுமதியின்றி அறிக்கைக்காக வேறு எழுத்து வேலையைச் செய்து பதிலாக அளித்தல், அறிக்கைக்குப் பதில் வேறு அறிக்கையை சமர்ப்பித்தல், அறிக்கையைத் தாமதமாகச் சமர்ப்பித்தல், ஐந்து பக்கம் கொண்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் அல்லது சரியாகச் செய்யப்படாத அறிக்கையைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றை விலக்கி வைக்கிறது. விலக்கி வைக்கப்பட்ட இந்த நடத்தைகள் எதுவும் (குறைவான மதிப்பெண்களைப் பெறுதல் போன்ற) விளைவுகளைக் கொண்டிருக்கும் என்பதை மாணவர் அறிகிறார்.

***தேவனுடைய சட்டங்கள் விலக்கி வைப்பவையாக உள்ளன***

*தேவன், தமது கட்டளைகள் விலக்கி வைப்பவைகளாக, மற்ற செய்முறைகளை நீக்கி வைப்பவையாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார் என்பதை வேதாகம உதாரணங்கள் விவரிக்கின்றன. லேவியராகமம் 10:1-3ல் அந்தக் கொள்கைக்கான ஒரு நல்ல விவரிப்பு காணப்படுகிறது. இந்த வசனப்பகுதியில், ஆரோனின் இரண்டு மகன்கள் "கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள்." அவர்களை அழிக்கத் தேவன் வானத்தில் இருந்து அக்கினியை அனுப்பினார் என்பதே அதன் விளைவாக இருந்தது.*

*அவர்கள் தேவனால் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டது ஏன்? அவர்கள் தேவனுடைய கட்டளைகளில் ஒன்றை மதியாதிருக்க முடியும் என்று முடிவு செய்ததினாலேயே என்பது உறுதி. பலிபீடத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய அக்கினியைப் தேவன் குறிப்பிட்டிருந்தார், ஆனால் அவர்கள் தேவனுடைய கட்டளைக்கு மிகச்சரியாகக் கீழ்ப்படிய அவசியம் இல்லை என்று நினைத்தனர். ஒருவேளை தேவன் கேட்டுக்கொண்ட அக்கினியைப் பயன்படுத்துதல் என்பது மிகவும் கடினமானதாக அல்லது வசதிக்குறைவானதாக இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் புதியதாகச் சில விஷயங்கள் தேவைப்பட்டன என்று நினைத்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் தங்களுக்குள், "தேவன் ஒரு குறிப்பிட்ட அக்கினியைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியதை நாம் அறிந்திருக்கிறோம், ஆனால் அவர், 'மற்ற அக்கினியைப் பயன்படுத்த வேண்டாம்' என்று கூறவில்லையே. இந்த அக்கினி போதுமான அளவு நல்லதாகவே உள்ளது" என்று கூறியிருக்கலாம். அவர்களின் வாதம் எதுவாக இருந்தபோதிலும், அவர்கள் தவறானவர்களாகவே இருந்தனர். குறிப்பிட்ட அக்கினியைப் பயன்படுத்த வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையானது மற்ற எல்லா வகை அக்கியையும் விலக்கி வைத்தது. தேவனுடைய கட்டளையின் விலக்கிவைக்கும் தன்மையை மீறியது அவர்களுக்கு உயிரை விலையாகக் கொடுக்கச் செய்தது.*

*இந்த விவரிப்பு பழைய ஏற்பாட்டில் இருந்து வருகிறது, மற்றும் அதன் பிரமாணங்கள் இன்றைய நாட்களில் உள்ள மக்களைக் கட்டுப்படுத்துவது இல்லை என்பது உண்மையே. அதே வேளையில், பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளவைகள் நம்மை எச்சரிக்கவும் ஊக்குவிக்கவும் எழுதப்பட்டன (1 கொரிந்தியர் 10:11; ரோமர் 15:4). இன்றைய நாட்களில் தேவன் நம்மை இதேபோன்ற கொள்கைகளின்படி கையாள்வதில்லை என்று உரிமை கோருபவர்கள் அபாயமான யூகங்களின் அடிப்படையில் இயங்குகின்றனர்.*

*உண்மையில் புதிய ஏற்பாடு, "கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராமல் மீறி நடத்தலுக்கு" எதிராக (2 யோவான் 9அ) அல்லது ஏவுதல் பெற்ற செய்தியுடன் ஒன்றைக் கூட்டுதலுக்கு எதிராக (வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19) நம்மை எச்சரிக்கிறது. எச்சரிக்கையின் இந்த வார்த்தைகள், தேவனுடைய கேட்டுக்கொள்ளுதல்களின் எல்லைகளைக் கடைப்பிக்கத் தவறுதலில் இருந்து மனிதர்களைக் காக்கும் மற்றும் அதன் மூலம் அந்தக் கேட்டுக் கொள்ளுதல்களின் விலக்கி வைக்கும் இயல்பை மீறாது காக்கும் நோக்கங்கொண்டிருக்கலாம்.*

*தேவனுடைய கட்டளைகள் விலக்கி வைப்பவைகளாக இருப்பதால், அது விலக்கி வைப்பது என்ன என்பதை உணர்ந்தறியக் கற்றுக்கொள்ளுதல் நமக்கு அவசியமானதாக உள்ளது.*

# ஒரு கட்டளை விலக்கி வைப்பது என்ன என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?

ஒரு கட்டளை விலக்கி வைப்பது என்ன என்பதைக் கண்டறிவதற்கு நாம், கட்டளைகளின் இயல்பை மிக நெருக்கமாக ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கட்டளைகள் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கலாம். ஒரு "நேர்மறையான" கட்டளை என்பது, நாம் சிலவற்றைச் செய்யும்படி கூறுவதாக உள்ளது, அதே வேளையில் ஒரு "எதிர்மறையான" கட்டளை என்பது நாம் சிலவற்றைச் *செய்யக்கூடாது* என்று நமக்குக் கூறுவதாக உள்ளது.

**கட்டளைகள் செய்யும் மூன்று விஷயங்கள்:**
**கேட்டுக்கொள்ளுதல், விலக்கி வைத்தல், அனுமதித்தல்**

கட்டளைகள் தங்கள் இயல்பிலேயே மூன்று பணிகளைக் கொண்டுள்ளன. அவைகள், (1) கேட்டுக் கொள்கின்றன, (2) விலக்கி வைக்கின்றன மற்றும் (3) அனுமதிக்கின்றன. வேதாகம உதாரணங்கள் சிலவற்றைக் குறித்து நாம் இந்த மூன்று பணிகளைப் பற்றிச் சிந்திப்போமாக.

*நோவாவின் பேழை.* கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையைச் செய்யும்படி நோவாவுக்குக் கூறப்பட்டது (ஆதியாகமம் 6:14). இந்தக் கட்டளை, (1) கொப்பேர் மரத்தைப் பயன்படுத்தும்படி *கேட்டுக் கொண்டது*; (2) மற்ற எந்த வகை மரத்தையும் பயன்படுத்துதலை *விலக்கி வைத்தது* (அல்லது தடை செய்தது) மற்றும் (3) அவர் அந்த மரத்தை எங்கு கண்டாலும், எங்கிருந்தாகிலும் அதைச் சேகரிக்க, அதைக் கட்டுமானப் பணியிடத்திற்கு அவரால் முடிந்த எவ்வகையிலும் கொண்டுவர, மற்றம் அவர் தேர்ந்தெடுக்கும் எந்தக் கருவியினாலும் அதை வெட்ட அவரை *அனுமதித்தது*.

*ஓய்வுநாள்.* இஸ்ரவேல் மக்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டளையிட்டது. இந்தப் பிரமாணம், (1) "ஓய்வுநாளை நினைவுகூர்ந்து அதைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும்" என்று *கேட்டுக்கொண்டது* (யாத்திராகமம் 20:8), குறிப்பாக ஓய்வுநாளில் அவர்கள் வேலை செய்யக்கூடாது. மேலும் இது (2) ஓய்வுநாளுக்குப் பதிலாக, வாரத்தின் வேறு எந்த நாளையாவது பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பதை *விலக்கி வைத்தது* மற்றும் (3) "வேலை" அல்லாத எந்த நடவடிக்கைகளையும் *அனுமதித்தது*.

*கர்த்தருடைய இராப்போஜனம்.* கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய அறிவுறுத்துதல்கள் (1) மற்ற விஷயங்களுக்கு மத்தியில் அப்பமும் திராட்ச ரசமும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று *கேட்டுக்கொள்கின்றன*; (2) (பிஸ்கட்டுகள் மற்றும் எலுமிச்சம்பழச்சாறு போன்ற) மற்ற எந்தப் பொருள்களையும் பயன்படுத்துவதை *விலக்கி வைக்கின்றன*; மற்றும் (3) கர்த்தருடைய பந்தியை, வரிசைகளில் அமர்ந்துள்ள தனிநபர்களுக்குப் பரிமாறுதலை அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக்கொள்வதற்கு அது வைக்கப்பட்டுள்ள ஒரு மேஜையினிடத்தில் பங்கேற்பவர்கள் வருதலை *அனுமதிக்கின்றன*; மற்றும் இது மரம், கல், உலோகம், கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் போன்ற பொருள்களால் ஆன பாத்திரங்களில் பரிமாறப்படுவதையும் *அனுமதிக்கின்றன*.

*ஞானஸ்நானம்.* ஞானஸ்நானம் கொடுக்கும்படியான கட்டளை,

(1) விசுவாசிகள் பாவமன்னிப்புக்கு முழுக்காட்டப்பட வேண்டும் என்று *கேட்டுக்கொள்கிறது*; (2) பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானத்தை, தெளித்தல் மூலமான "ஞானஸ்நானத்தை" மற்றும் பாவமன்னிப்பைப் "பெறுவதற்காக" என்பதற்குப் பதிலாக பாவமன்னிப்பைப் "பெற்றதன் காரணமாக" ஞானஸ்நானத்தை *விலக்கி வைக்கிறது*; மற்றும் (3) (முழுக்காட்டுதல் சாத்தியமாகிற வரைக்கும்) எவ்வகையான தண்ணீரிலும் ஞானஸ்நானம் பெறுதலை *அனுமதிக்கிறது*.

நேர்மறையான கட்டளைகள் கேட்டுக்கொள்கின்றன, விலக்கி வைக்கினறன மற்றும் அனுமதிக்கின்றன என்ற உண்மையானது, சுய ஆதாரம் உடையதாகக் காணப்படுகிறது. இருப்பினும், வேதாகமரீதியான கட்டளையைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில், கட்டளை கேட்டுக் கொள்வது என்ன, அது விலக்கி வைப்பது என்ன மற்றும் அது அனுமதிப்பது என்ன என்பவற்றைப் பற்றி எவ்வாறு அறிய முடியும் என்று இன்னமும் நாம் கேள்வி கேட்கலாம்.

### ஒரு கட்டளை கேட்டுக்கொள்வது, விலக்கி வைப்பது மற்றும் அனுமதிப்பது என்ன என்பவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்துதல்

*கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன என்பதே ஒரு கட்டளை கேட்டுக்கொள்வதாக உள்ளது*. உதாரணமாக, சபையானது ஒன்றுகூடி வரும்படி கட்டளையிடப் பட்டுள்ளது. கூடிவருவதற்கு குறிப்பான ஒரு கட்டளை புதிய ஏற்பாட்டில் பதியப்படவில்லை என்றாலும்கூட, முதல் நூற்றாண்டு சபையானது ஒன்றுகூடிவரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு ஏராளமான சாட்சியங்கள் உள்ளன (காண்க எபிரெயர் 10:25; 1 கொரிந்தியர் 14; 16:1, 2). நடபடிகளிலும் ஆதி சபையின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் பதிவேடுகளிலும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபையானது முறையாகக் கூடிவந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கும் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டு சபையானது பின்வருமாறு சட்டத்தைப் பின்பற்றியது: *சபையானது ஒன்றுகூடி வரவேண்டும்*.

தேவன் கட்டளையிட்டுள்ளவற்றைச் செய்வதில் இருந்து சபையை *விலக்கி வைக்கும் எந்த விஷயமும் விலக்கி வைக்கப்படுகிறது (அல்லது தடைசெய்யப்படுகிறது)*. சபைகூடி வருதல் என்ற விஷயத்தில், கிறிஸ்தவர்கள் தனித்தனியே ஆராதிக்கும் நடைமுறை மற்றும் சபைக்குழுமம் என்ற வகையில் ஒருக்காலும் கூடிவராத நிலை ஆகியவற்றை, இந்தக் கட்டளை புறம்பே தள்ளி விடுகிறது.

*தடைசெய்யப்படாத எந்த விஷயமும்* மற்றும் கட்டளையைச் செயல்படுத்தக் கூடியவர்களாக்கும் எந்த விஷயமும் *அனுமதிக்கப்பட்டதாக உள்ளது*. உதாரணமாக, சபைகூடிவருதல் என்ற விஷயத்தில், வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் சபைகூடி வருதலைத் தடைசெய்யும் குறிப்பான கட்டளை எதுவும் இருப்பதில்லை.[2] மேலும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் கூடிவர வேண்டும் என்று வேதவசனம் கேட்டுக்கொள்வது இல்லை. ஆகையால் ஒரு சபையானது தனது சொந்தக் கட்டிடத்திலோ, வாடகைக்கு அமர்த்தப்பட்ட அறையிலோ, தனிப்பட்ட இல்லத்திலோ அல்லது திறந்த வெளியிலோ கூடிவர முடியும்.

**புதிய ஏற்பாடு குறிப்பாகக் கேட்டுக்கொள்வது என்ன?**

"சபைக்குள் பிரவேசித்தல் என்பதற்குப் புதிய ஏற்பாடு குறிப்பாகக் கட்டளையிடுவது என்ன?" என்பது நமக்கு ஒரு கேள்வியாக உள்ளது. தேவன், "மனமாறியவர்களை சபைக்குள் கொண்டுவர தண்ணீர் பயன்படுத்தப்படட்டும்" என்று தேவன் கூறியிருந்தார் என்றால், எந்த வகையான தண்ணீர்ச் சடங்கும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்திருக்கும். இருப்பினும் அவர், "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படுகிற ஞானஸ்நானத்தைக் குறிப்பாக உரைத்துள்ளதால், முழுக்காட்டுதலுக்குப் பதிலாக வேறு எதையும் வைக்க நாம் சுயாதீனம் கொண்டிருப்பதில்லை. இப்படிப்பட்ட ஆழ்ந்த சிந்தனைகள், வேதாகம கட்டளைகளினால் விலக்கப்பட்டவை யாவை என்று தீர்மானிக்கப் பின்வரும் விதிக்குள் வழிநடத்துகின்றன: *ஒரு கட்டளையினால் சில விஷயங்கள் குறிப்பாகக் கேட்டுக்கொள்ளப்படும்போது, அதே வகையில் உள்ள மற்ற எந்த விஷயமும் விலக்கி வைக்கப்படுகிறது.*

## சோதனை விஷயம் ஒன்று: ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் பற்றிய விஷயம் என்ன?

நாம் பரீட்சித்துள்ள வழிகாட்டு குறிப்புகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று நாம் காண்போமாக. இதில் நாம், ஆராதனையில் இசைக் கருவிகள் என்ற தலைப்பைப் பயன்படுத்துவோம்.[3]

முதல் நூற்றாண்டில் இருந்த சபையானது ஆராதனையில் இசைக்கருவிகள் இன்றியே பாடியது என்பதை ஒப்புக்கொள்ளும் வேளையில், மக்களில் பலர், அந்த வடிவமைப்பு இன்றைய நாட்களில் ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டை உண்மையிலேயே விலக்கி வைக்கிறதா என்று கேள்வி கேட்கின்றனர். மேலே உரைக்கப்பட்ட "விலக்கிவைத்தலின் சட்டத்தை" பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக: *ஒரு கட்டளையினால் குறிப்பாக சில விஷயங்கள் கேட்டுக்கொள்ளப்படும்போது, அதே வகையில் உள்ள வேறு எந்த விஷயமும் விலக்கி வைக்கப்படுகிறது.* தேவன், "ஆராதனையில் இசை இருக்கட்டும்" என்று கூறியிருந்தார் என்றால், நாம் விரும்புகிற - இசைக்கருவிகளின் இசை, வாய்ப்பாட்டு இசை அல்லது இந்த இரண்டும் இணைந்த இசை என்று எதை வேண்டுமென்றாலும் - சபையில் பயன்டுத்த நாம் சுதந்தரம் கொண்டிருப்போம். அதற்குப் பதிலாக, நாம் "பாடி" நமது இருதயங்களில் கீர்த்தனம் பண்ண வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இவ்வாறு அவர், சபையில் தம்மைத் துதிப்பதற்குத் தமது மக்கள் பயன்படுத்தும்படி தாம் விரும்பும் வகையிலான இசையைக் குறிப்பிட்டார்: வாய்ப்பாட்டு இசை. வாய்ப்பாட்டுடன் கூடுதலாகவோ அல்லது அதற்குப் பதிலாகவோ இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் என்பது, நோவா "தேவன் 'கொப்பேர் மரம்' என்று கூறியதை நான் அறிவேன், ஆனால் நான் பைன் மரத்தைப் பயன்படுத்தப் போகிறேன்" என்றோ அல்லது "நான் கொப்பேர் மரம் மற்றும் பைன் மரம் ஆகிய இரண்டையும் பயன்படுத்தப் போகிறேன்" என்றோ கூறுவதற்கு ஒப்பாக இருக்கும்.

விளக்கவுரைகள் மீது எழுதுபவர்கள், வேதவசனங்களின் அமைதி மதிக்கப்பட

வேண்டும் என்று உரைத்துள்ளனர். இதன் மூலம் அவர்கள், இசைகருவிகள் பற்றி வேதவசனங்கள் அமைதி காப்பதால், அதை நாம் ஆராதனையில் பயன்படுத்தக்கூடாது என்று அர்த்தப்படுத்துகின்றனர். இருப்பினும் வேதவசனத்தின் அமைதி மாத்திரமே (இசைக்கருவியைப் பயன்படுத்துதலை) விலக்கி வைப்பதில்லை; மாறாக இது விலக்கி வைக்கப்படுகிறது என்று வேதவசனங்கள் பேசியுள்ளன. ஒரு நடைமுறையைக் கேட்டுக்கொள்ளுதல் பற்றி வேதவசனங்கள் பேசுகின்றன என்றால், அந்தக் குறிப்பிட்ட நடைமுறை மற்ற நடைமுறைகளை விலக்கி வைக்கிறது.

இவ்வகையான உய்த்துணருதல் எபிரெயர் 7ம் அதிகாரத்தில் காணப்படுகிறது: “நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே’’ (வசனம் 14). லேவி கோத்திரத்து முறைமையின்படியல்ல ஆனால் மெல்கிசேதேக்கு முறைமையின்படியே இயேசு ஒரு ஆசாரியராக இருக்கிறார் என்று எழுத்தாளர் குறிப்பிட்டார் (வசனங்கள் 11-17). ஆசாரியர்கள் தொடர்பாகப் பிரமாணம் எதையும் குறிப்பிட்டு இராத யூதா கோத்திரத்தில் இருந்து இயேசு உதித்தார் என்பதால், இது தெளிவாக உள்ளது என்று அவர் கூறினார். யூதா கோத்திரம் மற்றும் அதன் ஆசாரியத்துவம் ஆகியவற்றைப் பற்றி பிரமாணம் அமைதியாயிருத்தல் என்பது, வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே பழைய உடன்படிக்கையின்கீழ் சட்டப்பூர்வமான ஆசாரியர்களாக இருந்தனர் என்று அர்த்தப்படுத்திற்று. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், லேவி கோத்திரத்தில் இருந்தே ஆசாரியர்கள் வர வேண்டும் என்று தேவன் குறிப்பிட்டபோது, வேறு கோத்திரத்தில் இருந்து எந்த ஆசாரியரும் வருவதற்கான சாத்தியக் கூற்றை அவர் தவிர்த்தார். தேவன், “லேவி கோத்திரத்தில் இருந்து மாத்திரமே ஆசாரியர்கள் வர வேண்டும், ரூபன், சிமியோன், யூதா, பென்யமீன் அல்லது வேறு எந்தக் கோத்திரத்தில் இருந்தும் ஆசாரியர்கள் வரக்கூடாது’’ என்று கூறத் தேவையில்லாதிருந்தது. லேவி கோத்திரத்தில் இருந்து ஆசாரியர்கள் வருவார்கள் என்று கூறுதல், வேறு கோத்திரத்தில் இருந்து (சட்டப்பூர்வமாக, பிரமாணத்தின்படி) ஆசாரியர்கள் வரக்கூடும் என்ற சாத்தியக்கூற்றை விலக்கி வைத்தது. பிரமாணத்தின் கீழ் இயேசு ஒரு ஆசாரியராக இருக்க முடியும் என்ற சாத்தியக்கூறு விலக்கி வைக்கப்பட்டது - இது அவ்விஷயத்தில் வேதவசனங்கள் அமைதியாயிருத்தலினால் அல்ல, ஆனால் யார் ஆசாரியர்களாக இருக்க வேண்டும் என்று பிரமாணம் குறிப்பிட்ட காரணத்தினாலேயே இவ்வாறு ஆயிற்று.

இன்னொரு உதாரணம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் அடங்கியுள்ள பொருள்களை உள்ளடக்கி இருக்கிறது. கர்த்தருடைய பந்தியில் அப்பமும் திராட்ச ரசமும் பயன்படுத்த வேண்டும் என்று கர்த்தர் கேட்டுக்கொள்கிறார் என்று புதிய ஏற்பாட்டு ஆதாரம் போதிக்கிறது. ஐக்கிய விருந்தில் பிஸ்கட்டுகளையும் எலுமிச்சம்பழச் சாற்றையும் பயன்படுத்தக் கூடாது என்று தேவன் குறிப்பாகக் கூறவில்லை என்றாலும்கூட, அப்பம் மற்றும் திராட்சரசம் ஆகியவற்றைக் குறிப்பிட்டது, மற்ற பொருள்களைப் பயன்படுத்துவதை விலக்கிவைக்கப் போதுமானதாக உள்ளது. வேதவசனங்களின் அமைதி அல்ல, ஆனால் கிறிஸ்தவர்கள் எதைப்பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்பினார்

என்பதை அவர் அடையாளப்படுத்தினார் என்ற உண்மையினால்தான், வேறு எந்தப் பொருளையும் பயன்படுத்துதல் தவிர்க்கப்படுகிறது. அவ்வாறே, பாடுதலினால் நாம் தேவனை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் கூறியிருக்கும்போது, இசைக்கருவிகளின் பயன்பாட்டுடன் நாம் அவரைச் சட்டப் பூர்வமாக ஆராதிக்க முடியும் என்ற சாத்தியக்கூற்றைத் தவிர்த்தார்.[4]

வேதவசனங்கள் பற்றிய நமது விளக்கம் அளித்தலில், புதிய ஏற்பாட்டில் காணப்படும் மார்க்கச் செயல்முறைகளை இன்றைய நாட்களின் சபையில் நாம் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யும்போது, அந்த நடைமுறைகள் எஞ்சிய காலம் முழுவதற்கும் சபையிடம் கேட்டுக்கொள்ளப் பட்டவைகளாக இருக்கின்றனவா இல்லையா என்பதை நாம் முதலில் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. பின்பு நாம், மாறுபாடான செயல்முறைகள் விலக்கப்பட்டுள்ளதை உணர்ந்தறிய வேண்டும். அந்த நோக்கத்திற்காக நாம், "விலக்கிவைக்கும் விதி" என்பதை நடைமுறைப்படுத்த முடியும்: *ஒரு கட்டளையினால் குறிப்பாக சில விஷயங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறபோது, அதே வகையில் உள்ள மற்ற எந்த விஷயமும் விலக்கி வைக்கப்படுகிறது.*

## மறுப்புகளுக்குப் பதில் அளிக்க முடியுமா?

இந்தப் பாடத்தில் முன்வைக்கப்பட்ட போதனைகளுக்கு மறுப்புகள் எழுப்பப் பட்டுள்ளன. அந்த மறுப்புகளில் சில பின்வருமாறு:

### "மிகவும் சட்டரீதியானது"

தேவனுடைய கட்டளைகளின் விலக்கி வைக்கும் இயல்பு, புதிய ஏற்பாட்டை ஒரு சட்ட முறைமையாக்குகிறது, ஆனால் கிறிஸ்துவின் மார்க்கம் கிருபையின் முறைமையாக உள்ளது. அந்த மறுப்பிற்கு இரண்டு பதில்கள் தரப்பட வேண்டும்.

முதலாவது, புதிய உடன்படிக்கை கிருபையின் முறைமையாக இருந்தபோதிலும், சட்டரீதியான கேட்டுக்கொள்ளுதல்கள் என்ற வகைப்படுத்தப்படுபவற்றை அது உள்ளடக்குகிறது. சிலவிஷயங்கள் கீழ்ப்படியப்பட வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் நாம் காணும் இடங்கள் யாவற்றிலும் (மத்தேயு 7:21; ரோமர் 6:17, 18; எபிரெயர் 5:8, 9 போன்றவை), அவ்வசனப் பகுதிகள், *கிறிஸ்தவ யுகத்தில் கீழ்ப்படியப்பட வேண்டிய கட்டளைகள் உள்ளன* என்பதற்கு நிரூபணம் தருகின்றன. புதிய ஏற்பாடு "கிறிஸ்துவின் பிரமாணம்" பற்றிப் பேசுகிறது (கலாத்தியர் 6:2). கிறிஸ்தவ முறைமையானது ஒரு சட்ட முறைமையாக இராத போதிலும், அது பிரமாணங்களை (கட்டளைகள், கேட்டுக்கொள்ளுதல்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றை) உள்ளடக்குகிறது.

இரண்டாவது கிறிஸ்தவத்தில் உள்ள சட்டரீதியான கேட்டுக்கொள்ளுதல்களின் பணிப்பொறுப்பை எந்தக் கிறிஸ்தவரும் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. கீழ்ப்படிய வேண்டிய சட்டங்கள் உள்ளன, ஆனால் அவைகள் தேவனுடைய இயல்பிலும் நோக்கங்களிலும் தங்கள் தொடக்கத்தைக் கொண்டுள்ளன. மற்றும் அவைகள் நமது நன்மைக்காகவும் தேவனுடைய மகிமைக்காகவும் இருப்பதை நோக்கங்கொண்டுள்ளன. அவைகள் தகுதியானவற்றைச் செய்தலை உண்டாக்குதலை நோக்கங்கொண்டிருப்பதில்லை;

பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது தேவனுடைய கிருபையை நாம் பெறத் தகுதியானவர்கள் என்பதை விளைவிப்பதில்லை.

### *"மிகவும் பகுத்தறிவானது"*

வேதாகமத்திற்கு விளக்கம் அளித்தலுக்கு, இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அணுகுமுறை மிகவும் பகுத்தறிவானதாக உள்ளது என்பது எழுப்பப்பட்டுள்ள இன்னொரு மறுப்பாக உள்ளது. இது தர்க்கத்தின் மீது மிகவும் சார்ந்துள்ளது, இது இருதயத்திற்கு அல்ல, ஆனால் தலைக்கே வேண்டுகோள் விடுக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர். கிறிஸ்துவின் வழி என்பது முட்டைகளைப் பொறுக்கித் தேர்ந்தெடுக்கும் பகுத்தறிவு சார்ந்த முறைமை அல்ல, ஆனால் அது வாழ்வைப் பற்றி இருதயத்தில் உணரும் வழியாக உள்ளது என்று மறுப்பாளர்கள் உறுதிப்படுத்துவார்கள். அந்த மறுப்பிற்குப் பல்வேறு வழிகளில் பதில் அளிக்கப்பட முடியும்.

முதலாவது, கிறிஸ்தவமானது எல்லா வகையிலும் பகுத்தறிவு சார்ந்ததாக (மாத்திரம்) அல்ல, ஆனால் அதைக் கடைப்பிடிப்பவர்களுக்கு உணர்வுகளைத் தூண்டும் இருதயத்தில் உணரப்பட்ட மார்க்கமாக(வும்) உள்ளது, மேலும் நாம், கிறிஸ்துவின் வழியானது, மனித மனதின் மதிநுட்ப அல்லது பகுத்தறிவு அம்சத்துடன் உறவுபடுகிற தென்று நம்புகிறோம். "இருதயம்" மற்றும் "ஆத்துமா" ஆகியவற்றுடன் கூட, "மனதிலும்" நாம் தேவன் மீது அன்புகூரவேண்டும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 22:37). மற்றும் இயேசு போதித்தவை, அப்போஸ்தலர்கள் போதித்து எழுதியவை, அவற்றைக் கேள்விப்படுபவர்கள் தங்கள் மனங்களில் புரிந்துகொள்ளும்படி அறைகூவல் விடுத்தன. வேதவசனங்களுக்கு விளக்கம் அளிப்பதில் மதிநுட்பத்தை அல்லது பகுத்தறிவைப் புறக்கணித்தல் என்பது எதுவும், வேதாகமத்திலோ கிறிஸ்தவரிடத்திலோ இருப்பதில்லை.

இரண்டாவது, விளக்கம் அளித்தலுக்குப் பகுத்தறிவு அணுகுமுறைக்கு எதிராக விவாதித்தல் சீர்பொருத்தமானதாக இருப்பது சாத்தியமல்ல. ஒருவர் தேர்ந்துகொள்ளும் எந்த விவாதமும் ஏதேனும் ஒரு வகையான பகுத்தறிவின் அடிப்படையையே கொண்டிருக்கும்.

மூன்றாவது, மார்க்கரீதியான சில செயல்முறைகளை விலக்குதலுக்கான காரணங்கள், புரிந்து கொள்ள கடினமானவையாக இருப்பதில்லை. மாறாக, உய்த்துணருதல் என்பது, பெரும்பான்மையான மக்கள், விதிகள் மற்றும் முறைமைகள் ஆகியவற்றைக் கையாளும்போது அன்றாடம் பயன்படுத்துகிற பொது அறிவுக்கொள்கைகளை உறுதியாக ஆதரிக்க மாத்திரமே செய்கிறது.

### *"மிகவும் தேர்ந்தெடுப்பது"*

மற்றவர்கள், "விலகிவைக்கும் விதி" என்பது முற்றிலும் உதாரணங்களைச் சார்ந்துள்ளது, அதே வேளையில் அது, தேவனுடைய பிரமாணங்களை மீறிய சிலருக்கு அவர் இரக்கம் காண்பித்த சம்பவங்களின் மற்ற உதாரணங்களைப் புறக்கணிக்கிறது என்று மறுப்புத் தெரிவிக்கலாம். தேர்ந்துகொள்ளப்பட்ட உதாரணங்கள் மிகவும் தேர்ந்துகொள்ளப்பட்டவையாக உள்ளன மற்றும் அவைகள் முழுமையான சத்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை என்று இந்த மறுப்பாளர்கள் அறிவிப்பார்கள்.

அவ்வப்போது, தேவன் தமது சொந்த விதிகளையே புறக்கணித்து, அவற்றை மீறியவர்களைத் தண்டியாதிருந்தார் என்பது உண்மையே. குறிப்பாக, லேவியராகமம் 10:16-20ல், ஆரோனுக்கு எஞ்சியிருந்த இரு மகன்கள், பாவநிவாரண பலியைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசியாமல் இருந்து பிரமாணத்திற்குக் கீழ்ப்படியத் தவறியிருந்ததால், அவர்கள் மீது மோசே தமது வெறுப்பை வெளிப்படுத்தினார். இருப்பினும், இவ்விஷயத்தில் தேவனுடைய பிரமாணம் மீறப்பட்டிருந்தது என்றால், அந்தத் தவறான செயல் தேவனால் தண்டிக்கப்படவில்லை. “அந்நிய அக்கினி” நிகழ்விற்கும் (லேவியராகமம் 10:1-3) பலியைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கத் தவறிய நிகழ்விற்கும் இடையில் உள்ள வேறுபாடு தெளிவற்றதாக இருக்கிறது. ஒரு மீறுதலைத் தேவன் தண்டித்து இன்னொன்றைக் காணாது விட்டது ஏன்?[5] ஒரு வேளை இதில் ஈடுபட்ட மக்களின் இருதயங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் வேறுபாடு இருந்திருக்கலாம். ஒருவேளை ஒரு பாவமானது அடங்காமையில் செய்யப்பட்ட பாவமாகவும் இன்னொன்று நோக்கம் இன்றிச் செய்யப்பட்ட பாவமாகவும் இருந்திருக்கலாம் (காண்க எண்ணாகமம் 15:27-31).[6] அப்படியென்றால், இந்த உதாரணம், அறியாமையினால் பாவம் செய்பவர்களைக் கையாளும் வகையில் இன்றி, வேண்டுமென்றே அல்லது அடங்காத வகையில் பாவம் செய்கின்றவர்களைத் தேவன் வேறுபட்ட வகையில் கையாளுகிறார் என்று கருத்துத் தெரிவிக்கலாம்.

இருப்பினும், இப்படிப்பட்ட உதாரணம் போதிக்கிற எல்லாமுமாக இந்தக் கொள்கை உள்ளது. குறைந்த பட்சமாகக் கூறுவதென்றால், இப்படிப்பட்ட விஷயங்கள் விதிவிலக்குகளாக உள்ளன; தேவன் கீழ்ப்படியாமைக்குத் தண்டனை தருகிறார் என்பதே சட்டமாக உள்ளது. விதிவிலக்குகளாக இருப்பவை, இன்றைய நாட்களில் தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்கள் வேதாகமத்தை “எந்த விஷயமும் செல்லும்” என்ற எண்ணப்போக்குடன் அணுகமுடியும், தேவன் எவ்வகையான ஆராதனையையும் ஏற்றுக்கொள்வார் அல்லது அவரது பிரமாணத்தை மீறும் ஒவ்வொரு முறையும் சாக்குப்போக்கு ஏற்றுக்கொள்வார் என்று நம்பமுடியும் என்று கருத்துத் தெரிவிப்பதில்லை. எந்த தனிநபரும், தெய்வீகக் கட்டளை ஒன்றிற்குத் தாம் வேண்டுமென்றே கீழ்ப்படியாது இருந்ததை, நியாயத்தீர்ப்பு நாளில் தேவன் காணாதுவிடத் தேர்ந்துகொள்வார் என்ற சாத்தியக்கூற்றின் மீது தமது இரட்சிப்பை இடர்ப்பாட்டிற்கு ஆளாக்க விரும்ப மாட்டார்.

## முடிவுரை

தேவனுடைய நேர்மறையான கட்டளைகள் விலக்கி வைப்பவையாக உள்ளன. அவற்றின் குறிப்பான கேட்டுக்கொள்ளுதல்கள், அதே வகையில் உள்ள மார்க்கரீதியான மற்ற செய்முறைகளை விலக்கி வைக்கின்றன. மற்றும், மார்க்கரீதியாக விலக்கி வைக்கப்பட்டுள்ள எந்த செயல்முறைகளிலாவது ஈடுபட்டுள்ள எவரும் தேவனால் தண்டிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர் என்று வேதாகம போதனை கருத்தாகத் தெரிவிக்கிறது.

அவ்வகையான முடிவு, இருபத்தியோராம் நூற்றாண்டில் இருக்கும் பலருக்கும், ஒரு “கடினமான கூற்றாக” உள்ளது. தேவனால் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கரீதியான செய்முறைகளுக்குக் கீழ்ப்படியாதிருத்தல் பாவம் நிறைந்ததாக

உள்ளது. அது நித்திய ஆக்கினைத்தீர்ப்புக்கு நம்மை வழிநடத்தும் என்பதைக் காட்டிலும் பிரபலமற்ற போதனை வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த வேளையில் மக்களில் பலர், யாரேனும் ஒருவர் தவறானவாராக இருக்கிறார் என்று கூறுதல்தான் "தவறாக" உள்ள ஒரே விஷயம் என்று நினைப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும் நாம், வேதவசனங்களுக்கு விளக்கம் அளித்து அவற்றை நடைமுறைப்படுத்துகையில் - மற்ற மக்கள் அல்லது நவீன காலச்சாரத்தின் மீதல்ல ஆனால் - தேவன் மீதும் அவரது வசனத்தின் மீதுமே நமது முதன்மைப் பற்றுறுதி உள்ளது.

மற்றவர்கள் என்ன கூறுகின்றனர் அல்லது நம்புகின்றனர் அல்லது செய்கின்றனர் என்பது விளக்கம் அளித்தலில் முதன்மை அக்கறையாக இருப்பதில்லை. வேதாகமத்தை நாம் ஊக்கமாகப் படித்தால், தேவனுடைய சித்தத்தைக் கற்றறிந்தால், மற்றும் அதன்படி செய்தால், தேவனுடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட முடியும் மற்றும் இரட்சிக்கப்படுவோம் என்று அறிதலில் நாம் ஆறுதல் பெற முடியும்!

---

குறிப்புகள்

[1]அமெரிக்காவில் குடிமை வரிகளைச் செலுத்துதலுக்கான கடைசித்தேதி ஏப்ரல் 15 என்ற சட்டம் குறித்த விஷயத்தில், அந்தச் சட்டமே சில விதிவிலக்குகளை அளிக்கிறது. இருப்பினும் அந்த விதிவிலக்குகள், விதியை நீக்கிப்போடுவதில்லை. காலத்தில் தமது வரியைச் செலுத்தாத எந்தக் குடிமகனும், விதியை மீறியவர் என்ற வகையில் தண்டிக்கப்படக் கூடும். [2]சபையானது குறைந்த பட்சம் வாரத்தில் ஒருநாள் கூடிவர வேண்டும், அது வாரத்தின் முதல் நாளாக இருக்க வேண்டும், அந்நாளில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க வேண்டும். மற்ற எத்தனை முறை கூடுதலாக சபை கூடிவர வேண்டும் என்று வேதவசனங்கள் கூறுவதில்லை. [3]மற்ற சூழ்நிலைகளுக்கும் இந்த விதியை நடைமுறைப்படுத்த முடியும் மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டும். இசைக்கருவிகளின் இசை என்பது பல தனிநபர்களைத் தொல்லைப்படுத்தும் விஷயமாக இருப்பதால், அது இங்கு ஒரு உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. [4]இசைக் கருவி என்பது, பாடுதலுக்கான கட்டளையினால் தவிர்க்கப்பட்டுள்ளது என்றால், பாடல் புத்தகங்களும் தவிர்க்கப்படாதது ஏன்? ஏனென்றால் இசைக்கருவியின் இசையானது பாடலின் அதே வகையைச் சேர்ந்ததாக உள்ளது; இரு வகையான இசைகள் உள்ளன, மற்றும் சபையில் எவ்வகையான இசையைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அவரே குறிப்பிட்டார். பாடல் புத்தகங்கள் வேறு வகையான இசையாக இருப்பதில்லை, எனவே ஆராதனையில் பாடுதலுக்கான கட்டளையினால் அவைகள் அனுமதிக்கப்படுகின்றன. [5]2 நாளாகமம் 30ல் இன்னொரு உதாரணம் காணப்படலாம். இந்த விபரமானது, எசேக்கியாவின் நாட்களில் யூதர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரித்தனர். ஆனால் பஸ்கா பண்டிகை, எப்போது மற்றும் எவ்வாறு ஆசரிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய பிரமாணங்களை அவர்கள் மதிக்கவில்லை. பிரமாணத்தை மிகச்சரியாகக் கடைப்பிடிக்கத் தவறியதற்காக அவர்களைத் தேவன் அங்கீகரியாதிருந்தார் என்பதற்கான குறிப்பு எதையும் நாம் காண்பதில்லை. [6]இந்த வேளையில் குற்றம் செய்தவர்களின் இருதயங்கள் நேரானவையாக இருந்த காரணத்தால், அவர்கள் மீது தேவன் இரக்கம் பாராட்டினார் என்று விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். R. லேய்ர்டு அவர்கள், "... மோசே மனநிறைவு உடையவராக இருந்தார்;

*ஏனெனில் ஆரோன் புறக்கணிக்க வேண்டும் என்றல்ல, அல்லது இயந்திரத்தனமாக அல்ல, ஆனால் பொறுப்பான உண்மைத்தன்மையில் தான் செயல்பட்டிருந்தார். பழைய ஏற்பாட்டிலும்கூட, எல்லாப் பலிகளிலும் இயந்திரத்தன்மையைக் காட்டிலும் இருதய எண்ணப்போக்கே மிகவும் முக்கியமானதாக இருக்கிறது (1 சாமுவேல் 15:22; 2 நாளாகமம் 30:19)" என்று எழுதினார்* (R. Laird Harris, "Leviticus," in *The Expositor's Bible Commentary,* vol. 2, *Genesis, Exodus, Leviticus, Numbers,* ed. Frank E. Gaebelein [Grand Rapids, Mich.: Zondervan, 1990], 567). *கோர்டென்* J. *வென்ஹாம் அவர்கள், மோசே திருப்தியடைந்திருந்தார் என்ற உண்மையானது, "நாதாப் மற்றும் அபியூ ஆகியோர் செய்தது போன்று, கவனமற்ற வகையிலும் துணிகரமாகவும் தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிப்பவர்களைக் காட்டிலும், தவறுகளைச் செய்கிறவர்கள் அவருக்கு அதிகமாக அஞ்சி நடப்பதால், தேவன் அவர்கள்மீது அதிக இரக்கம் உள்ளவராக இருக்கிறார் என்று கருத்துத் தெரிவிப்பதாக இருக்கலாம் [லோவியராகமம் 10:1-3]" என்று கூறினார்* (Gordon. J. Wenham, *The Book of Leviticus,* The New International Commentary on the Old Testament [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979], 160). *பர்ட்டன் காஃப்மேன் அவர்கள், ஆரோன் தமது மகன்களின் பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டார் என்ற கருத்தின் மீது கவனம் குவித்து, இவ்வசனப்பகுதி, "பழைய ஏற்பாட்டிலும் கூட, தேவனுடைய பிரமாணத்தைப் பார்க்கிலும் அவரது இரக்கம் உயர்வாக மதிக்கப்பட்டது" என்று விவரிப்பதாகக் கூறினார்* (James Burton Coffman, *Commentary on Leviticus and Numbers* [Abilene, Tex.: ACU Press, 1987], 88).